**BILL PRESENTMENT சேவைக்கான வாடிக்கையாளர் நியதிகளும் நிபந்தனைகளும்**

இந்நியதிகளும் நிபந்தனைகளும் FriMi மீதான Bill Presentment சேவையினைப் பயன்படுத்தவதற்கு நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சிக்கும் ஒவ்வொருவாடிக்கையாளருக்கும் இடையிலான சட்டரீதியான உடன்படிக்கை ஒன்றை அமைக்கின்றன.

கீழே "ஏற்றுக்கொள்க"/ "ACCEPT" என்ற பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர் பின்வருமாறு ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார்:

**இந்நியதிகளும் நிபந்தனைகளும் Bill Presentment சேவை தொடர்பிலான விபரங்களுடன் ஒன்றிணைத்து வாடிக்கையாளருக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அத்துடன் அத்தகைய விபரங்களை வாடிக்கையாளர் வாசித்து புரிந்துகொண்டுள்ளார் என்றும் அவற்றின் மூலம்கட்டுப்படுவதற்கு இணங்கி சம்மதிக்கின்றார் என்றும்:**

1. வரைவிலக்கணங்கள்

"பட்டியல் கணக்கு" என்பது தொடர புடைய பயன்பாட்டுச் சேவை வழங்குநர் மூலம் வாடிக்கையாளரொருவருக்கு வழங்கப்பட்ட தொடர்புடைய பட்டியல் மீது காண்பிக்கப்பட்ட தனித் து வமான இலக்கம் என்பதுடன் வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கணக்கு இலக்கம் என்று பொருளாகும்.

"Bill Presentment " என்பது FriMi செயலி ஊடாக பதிவுசெய்யப்பட்ட வேறுபட்ட பயன்பாட்டுச் சேவை வழங்குநர்களுடன் தமது பயன்பாட்டு கட்டணப் பட்டியல்களை கொடுப்பனவுசெய்வதற்கு வாடிக்கயைளார்களுக்கு வசதியளிக்கின்ற FriMi மீதான சேவை என்று பொருளாகும்.

2. Bill Presentment சேவையைப் பயன்படுத்தல்

அ) FriMi செயலி ஊடாக Bill Presentment வழங்குவதற்கு நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியுடன் பதிவுசெய்துள்ள பயன்பாட்டுச் சேவை வழங்குநர்கள் தொடர்பில் மாத்திரம் Bill Presentment சேவை கிடைக்கப்பெறும்

ஆ) Bill Presentment சேவையைப் பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர் FriMi இற்கு பட்டியல் கணக்கிலக்கத்தைச் சேர்க்க வெண்டும். 2அ) வாசகத்திற்குட்பட்டு, பட்டியல் கணக்குகளின் எத்தனை எண்ணிக்கையையும் FriMi இற்குச் சேர்க்கலாம்.

இ) FriMi இற்கு அத்தகைய பட்டியல் கணக்கைச் சேர்க்கின்ற நேரத்தில் ஒவ்வொரு பட்டியல் கணக்கிற்கும் அமைக்கப்பட்ட கணக்கு சாதனமொன்றைத் தெரிவுசெய்து சேர்க்க வேண்டும். பிரதிநிதியினை உறுதிசெய்யும் பொருட்டு, பிரதிநிதியளிப்பிற்க்கான கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு வேண்டப்பட்டுள்ள ("பிரதிநிதியளிக்கப்பட்ட பயனாளர்") வேறொரு வாடிக்கைளாயருக்கான ஒவ்வொரு பட்டியல் கணக்கின் கீழும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர் பிரதிநிதியளிக்கப்படலாம். கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அவர் நியமிக்கப்பட்டுள்ள தொடர்புடைய கணக்கின் கீழ் கடந்த கால கொடுப்பனவு விபரங்களை பார்வையிடுவதற்கு பிரதிநிதியளிக்கப்பட்ட பயன்பாட்டாளர் இயலுமாக இருப்பார். பிரதிநிதியளிக்கப்பட்ட பயனரின் நியமனம் வாடிக்கையாளரினால் பிரதிநிதியளிக்கப்பட்ட பயனரை நியமித்த எந்நேரத்திலும் இரத்துச்செய்யப்படலாம்.

ஈ. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியானது வெறுமனே வாடிக்கையாளர் மூலமான பயன்பாட்டுச்சேவை கட்டணப்பட்டியல்களின் கொடுப்பனவினை வசதிப்படுத்துவதற்கான தொழில்நுட்ப தளமொன்றையே வழங்குவதுடன் FriMi மீது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் பட்டியல் கணக்கு தொடர்பில் உரிய திகதி.்.தொகை பற்றி வாடிக்கையாளர்களுக்கு அத்துடன்.்.அல்லது எவரேனும் பிரதிநிதியளிக்கப்பட்டபயனருக்கு ஞாபகமூட்டல்களை அனுப்புவதற்கான ஏதேனும் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதில்லை. மேலும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, வாடிக்கையாளர் ஒருவர் அத்துடன்.்.அல்லது எவரேனும் பிரதிநிதியளிக்கப்பட்ட பயனர் பயன்பாட்டுச் சேவை வழங்குனர்களுடன் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் பிணக்குகள் தொடர்பிலான மத்தியஸ்தத்திற்கு ஏதேனும் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதில்லை.

வாடிக்கையாளர் ஒருவரின் ஒவ்வொரு பட்டியல் கணக்கு மீதும் காண்பிக்கப்பட்ட தகவல்கள் உரிய பயன்பாட்டு சேவை வழங்குனர் மூலம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்கு வழங்கப்படும் தகவல்களை உள்ளடக்குவதுடன் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி அத்தகைய தகவல்கள் தொடர்பில் அதற்கேற்றவாறு பொறுப்பெதனையும்.்.கடப்பாடெதனையும் ஏற்றுக்கொள்ளாது.

உ. மேலும், இலத்திரனியல் ரீதியாக தகவல்களை கடத்துதலானது அத்தகைய கடத்துதலின் உட்பொதிந்த தன்மையின் காரணமாக பிழையற்றதாக இருக்குமென உத்தரவாதமளிக்கப்பட முடியாது. ஆகையினால் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி ஏதேனும் பட்டியல் கணக்கு மீது காண்பிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பில் எவையேனும் பிழைகளுக்கு அத்தடன்.்.அல்லது அதன் விளைவாக வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய அல்லது அவர் வருந்தக் கூடிய ஏதேனும் இழப்பிற்கு இழப்பீடு வழங்கப்படுமென உத்தரவாதமளிக்க முடியாது

ஊ. அத்தகைய இரு ஆவணங்களும் ஒரு மற்றும் அதே ஆவணத்தை உருவாக்கி அமைக்கும் என்ற விதத்தில் இந்நியதிகளும் நிபந்தனைகளும் FriMi மீது பதிவுசெய்கின்ற போது ஏற்கனவே வாடிக்கையாளர் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாடிக்கையாளர் நியதிகளை மற்றும் நிபந்தனைகளை துணை நிரப்பச்செய்வதாக இருக்கும் என்பதுடன் சேர்த்து வாசிக்கப்படுதலும் வேண்டும்.

எ. இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் எந்நேரத்திலும் திருத்துவதற்கு வங்கி சுயமான உரிமையினை கொண்டுள்ளது. அத்தகைய மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். இந்நியதிகளும் நிபந்தனைகளும் சட்டத்தினால் அத்தகைய திருத்தங்கள் அவசியப்படுத்தப்படுமாயின் தன்னிச்சையாக திருத்தப்படுவதாகவிருக்கும்.

ஏ) இதில் வேறு வகையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டாலன்றி, இந்நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பெரிய எழுத்துக்களினான சொற்பதங்கள் வாடிக்கையாளரினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட FriMi நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ("பிரதான ஒப்பந்தம்") கொண்டிருக்கும் அதே பொருளை கொண்டிருக்கும்.

ஐ) இந்நியதிகளும் நிபந்தனைகளும் பிரதான ஒப்பந்தம் மற்றும் வங்கியின் பொதுவான தொழில் நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் (இவற்றின் பிரதிகள் கோரிக்கையின் பேரில் கிடைக்கப்பெறுகின்றன). அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இதில் கூட்டிணைக்கப்பட்டிருந்தாலும் சரி கூட்டிணைக்கப்படவில்லையாயினும் சரி என்பதனை பொருட்படுத்தாது வாடிக்கையாளர் அனைத்து அத்தகைய நியதிகளாலும் நிபந்தனைகளாலும் கட்டுப்படுத்தப்படுவர்.